# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

## *2023 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 13 ஆந் திகதிய*
## *பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2023.10.16 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும்

***மத்தியஸ்தம் மீதான சிங்கப்பூர் சமவாயம் எனவறியப்படும் மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளின்மீது ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும்; சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரிப்பதற்கும் வலுவுறுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.***

*நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.*

*கொழும்பு 05, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.*

**விலை: ரூபா 23.00** | **தபாற்செலவு : ரூபா 25.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *என்னும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

2 - PL 014086 - 465 (2023/ 09)

*ச.வ.–ஓ. 42/2022*

**மத்தியஸ்தம் மீதான சிங்கப்பூர் சமவாயம் எனவறியப்படும் மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளின்மீது ஐக்கிய நாடுகள் சமவாயத்துக்குப் பயன்கொடுப்பதற்கும்; சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரிப்பதற்கும் வலுவுறுத்துவதற்கும் ஏற்பாடுகளைச் செய்வதற்கும்; அத்துடன் அவற்றோடு தொடர்புபட்ட அல்லது அவற்றின் இடைநேர்விளைவான கருமங்களுக்காக ஏற்பாடுசெய்வதற்குமானதொரு சட்டம்.**

*முன்னுரை.*

*(இதனகத்துப்பின்னர் "சமவாயம்" எனக்குறிப்பீடுசெய்யப்படும்) மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகள்மீதான சமவாயம், இரண்டாயிரத்துப் பதினெட்டாமாண்டு திசெம்பர் மாதம் இருபதாம் நாளன்று ஐக்கிய நாடுகளின் பொதுச் சபையினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு அடுத்துப்பின்னர் இரண்டாயிரத்து இருபதாமாண்டு செத்தெம்பர் மாதம் பன்னிரெண்டாம் நாளன்று வலுவுக்கு வந்ததாதலாலும்:*

*அத்துடன் வர்த்தகப் பிணக்குகளைச் சுமுகமானமுறையில் தீர்த்துவைப்பதற்கான முறையொன்றாக மத்தியஸ்தத்தின் பெறுமதியை ஏற்றங்கீகரித்தும், சர்வதேசரீதியிலும் தேசியரீதியிலும் மத்தியஸ்தத்தின் பாவனையிலான அதிகரிப்பைக் கவனித்தும், இலங்கை அரசாங்கம், இரண்டாயிரத்துப் பத்தொன்பதாமாண்டு ஓகத்து மாதம் ஏழாம் நாளன்று சமவாயத்தைக் கையொப்பமிட்டதாதலாலும்:*

*அத்துடன் சமவாயத்தின்கீழ் சர்வதேச மத்தியஸ்தத் தீர்த்துவைத்தல்கள்மீது சட்டக் கட்டுக்கோப்பொன்றை நிலைநாட்டுதலானது, பிணக்குகள் வர்த்தகத் தொடர்புமுறைகளின் முடிவுறுத்துகையை விளைவிக்கின்ற சந்தர்ப்பங்களைக் குறைத்து ஒத்திசைவான சர்வதேசப் பொருளாதாரத் தொடர்புகளின் அபிவிருத்திக்குப் பங்களிக்குமாதலாலும்:*

*அத்துடன் சமவாயத்தின்கீழ் இலங்கையின் கடப்பாடுகளுக்குப் பயன்கொடுப்பதற்குச் சட்டவாக்க*

ஏற்பாட்டை இயற்றுவது இலங்கை அரசாங்கத்துக்கு அவசியமாகவுள்ளதாதலாலும்:

ஆகவே இப்பொழுது இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்ட மாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயரும் நடைமுறைக்கு வரும் தேதியும்.

***1***. *(1)* இச்சட்டம் *2023* ஆம் ஆண்டின் .......... ஆம் இலக்க, மத்தியஸ்தத்திலிருந்து விளைகின்ற சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைகளை ஏற்றங்கீகரித்தலும் மற்றும் வலுவுறுத்தலும் பற்றிய சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*(2)* இச்சட்டத்தின் ஏற்பாடுகள், இலங்கை தொடர்பில் சமவாயமானது எத்தேதியன்று வலுவுக்கு வருகின்றதோ அத்தேதியாக அமைச்சர், வர்த்தமானியில் வெளியிடப்படும் கட்டளைமூலம் சான்றுப்படுத்தக்கூடிய அத்தகைய தேதியன்று நடைமுறைக்குவருதல் வேண்டும்.

சட்டத்தின் ஏற்புடைமை.

***2***. *(1)* இச்சட்டத்தின் ஏற்பாடுகள், *3* ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கமைவாக, எழுத்திலானவொரு தீர்த்து வைத்தல் உடன்படிக்கை செய்துமுடிக்கப்பட்ட நேரத்தில் சர்வதேசத் தன்மையினதாக உள்ளதும், மத்தியஸ்தத்திலிருந்து விளைந்துள்ளதும், ஒரு வர்த்தகப் பிணக்கொன்றைத் தீர்த்துவைப்பதற்குத் திறத்தவர்களினால் செய்துமுடிக்கப்பட்டதும், (இதனகத்துப் பின்னர் “சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை” எனக் குறிப்பீடு செய்யப்படுவதுமான) அவ்வுடன்படிக்கைக்கு ஏற்புடையனவாதல் வேண்டும்.

*(2)* ஏதேனும் சர்வதேச தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கு இச்சட்டத்தின் ஏற்பாடுகளின் ஏற்புடைமை இலங்கை அரசாங்கத்தினால் சமவாயத்தின் *8* ஆம் உறுப்புரையின்கீழ் பிரகடனம் செய்யப்படக்கூடியவாறான அத்தகைய ஒதுக்கீடுகளில் குறித்துரைக்கப்பட்ட அதேயளவுக்கு அமைந்ததாதல் வேண்டும்.

இச்சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையன வாகமாட்டாது

***3***. இச்சட்டத்தின் ஏற்பாடுகள், பின்வருவனவற்றுக்கு ஏற்புடையனவாதலாகாது:-

(அ) பின்வருவன தொடர்பானதாகவுள்ள செய்து கொள்ளப்பட்ட தீர்த்துவைத்தல் உடன்படிக்கை–

(i) தனிப்பட்ட, குடும்ப அல்லது வீட்டு நோக்கங்களுக்காக பாவனையாளர் ஒருவராகவுள்ள திறத்தவர்களிலொருவர் ஈடுபட்டுள்ளவொரு கொடுக்கல்வாங்கல்; அல்லது

(ii) குடும்ப விடயங்கள், மரபுரிமை, அல்லது தொழில் விடயங்கள்; அல்லது

(ஆ) (i) நீதிமன்றமொன்றினால் தீர்ப்பொன்றாகச் செய்துமுடிக்கப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட அத்துடன் நீதிமன்ற மொன்றின் தீர்ப்பொன்றாக வலுவுறுத்தப் படற்பாலதுமான தீர்த்துவைத்தல் உடன்படிக்கை; அல்லது

(ii) ஒரு நடுத்தீர்ப்புரீதியிலான அளிப்பொன்றாக வலுவுறுத்தப்படற்பாலதாகவுள்ள தீர்த்து வைத்தல் உடன்படிக்கை.

*சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை.*

**4.** ஒரு தீர்த்துவைத்தல் உடன்படிக்கை பின்வருமிடத்து அது செய்துமுடிக்கப்பட்ட நேரத்தில் சர்வதேசத் தன்மை யினதாகவிருத்தல் வேண்டும்:–

(அ) தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர் களுள் ஆகக்குறைந்தது இருவரேனும் அவர்களின் தொழிலிடங்களை வெவ்வேறு அரசுகளில் வைத்திருக்குமிடத்து; அல்லது

(ஆ) தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர்கள் தமது தொழிலிடங்களை வைத்திருக்கும் அரசு பின்வருவனவற்றுள் ஒன்றிலிருந்து வேறுபடுமிடத்து–

(i) தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின்கீழான கடப்பாடுகளின் கணிசமானவொரு பாகம் எந்த அரசில் புரியப்படுகின்றதோ அந்த அரசு; அல்லது

(ii) தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் விடயப்பொருள் எந்த அரசுடன் நெருக்கமாகச் சம்பந்தப்பட்டுள்ளதோ அந்த அரசு.

*சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக் கையின் செல்லு படியாந் தன்மை.*

5. ஒவ்வொரு சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையும், 6 ஆம் பிரிவின்கீழ் செய்யப்பட்ட விண்ணப்பத்தின்மேல், மேல் நீதிமன்றத்தின் தீர்வையொன்று மறுக்கப்பட்டாலொழிய, செல்லுபடியானதாகவும் வலுவுறுத்தப்படற்பாலதாகவும் இருத்தல் வேண்டுமென்பதுடன், திறத்தவர்களினால் அதன்கீழ் ஏற்கப்பட்ட கடப்பாடுகளுக்கு, வேறேதேனும் ஒப்பந்தஞ்சார் உடன்படிக்கையின் விடயத்திற்போன்று திறத்தவர்களினால் மதிப்பளிக்கப்படுதலும் வேண்டும்.

*மேல் நீதி மன்றத்துக்கான விண்ணப்பம்*

6. (1) ஒரு சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவரொருவர், அத்தகைய சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையை வலுவுறுத்தும் நோக்கத்துக்காக அச்சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையை மேல் நீதிமன்றத்தின் தீர்வையொன்றாகப் பதியச்செய்வதற்கு மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்யலாம்.

(2) ஓராம் உட்பிரிவின்கீழான விண்ணப்பமொன்றைப் பெற்றதன்மேல், இச்சட்டத்தின் ஏற்பாடுகளின்கீழ் வழக்கு நடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கு அல்லது இறைஞ்சிக் கேட்கப்பட்ட நிவாரணத்தை அளிக்க மறுப்பதற்கு ஏதுக்களெவையும் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லையென மேல் நீதிமன்றம் திருப்திப்படின், மேல் நீதிமன்றம், திறத்தவர்களுக்கு அறிவித்தல் கொடுக்கப்படவேண்டிய ஒருநாளன்று சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின்படி தீர்ப்பைப் பதிவதற்கு முற்படுதல் வேண்டுமென்பதுடன் அதன்மேல் தீர்வையொன்று பதியப்படுதலும் வேண்டும்.

(3) இச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய, மேல் நீதிமன்றத்தின் தீர்வையொன்றாக மேல் நீதிமன்றத்தினால் பதிவு செய்யப்படும் சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையொன்று —

(அ) மேல் நீதிமன்றத்தினால் அளிக்கப்பட்ட தீர்ப்பொன்றாக அல்லது ஆக்கப்பட்ட கட்டளையொன்றாக அதே முறையில் வலுவுறுத்தப்படலாம்; அத்துடன்

(ஆ) எவையேனும் நீதிமன்ற வழக்குநடவடிக்கைகளில் ஓர் எதிர்வாதமாக, எதிரீடாக அல்லது வேறுவகையாகச் சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர்களினால் நம்பப்படலாம்.

(4) இச்சட்டத்தில் குறித்துரைக்கப்பட்ட எல்லா வழக்குகளையும் கவனத்துட்கொள்வதற்கும் அவற்றைக் கேட்டுத் தீர்மானிப்பதற்கும் மேல் நீதிமன்றம் முழுத்தத்துவம் கொண்டதாகவிருத்தல் வேண்டும்.

சான்றாக நீதிமன்றத்தில் சர்வதேசத் தீர்த்து வைத்-தல் உடன் படிக்கையின் ஏல்தகவு.

7. ஒரு சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைமூலம் தீர்த்துவைக்கப்பட்டுள்ளதெனத் திறத்தவரொருவர் உரிமைகோருகின்ற ஒரு கருமம் தொடர்பான ஏதேனும் வழக்கில் பிணக்கொன்று எழுமிடத்து, அத்தகைய சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை, அத்தகைய கருமம் ஏலவே தீர்த்துவைக்கப்பட்டுள்ளதென்பதனை நிலைநாட்டுவதற்குச் சான்றாக ஏல்தகவுடையதாதல் வேண்டும்.

சர்வதேசத் தீர்த்து வைத்தல் உடன்படிக் கைகளின் மீது நம்பியிருப்பதற் கான தேவைப் படுகள்.

8. (1) ஆறாம் பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்றைச் செய்கின்ற அல்லது ஏதேனும் நீதிமன்ற வழக்கு நடவடிக்கையில் 7 ஆம் பிரிவின் ஏற்பாடுகளின்கீழ் சான்றாக ஏல்தகவுடைய சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையொன்றின்மீது நம்புவதற்கு உட்கருதுகின்ற திறத்தவரொருவர், விடயத்துக்கேற்ப, மேல் நீதிமன்றத்துக்கு அல்லது நீதிமன்றத்துக்குப் பின்வரும் ஆவணங்களைச் சமர்ப்பித்தல் வேண்டும்:-

(அ) திறத்தவர்களினால் கையொப்பமிடப்பட்ட உடன்படிக் கையின் மூலப்பிரதி அல்லது முறையாகச் சான்றுப் படுத்தப்பட்ட பிரதியொன்று; அத்துடன்

(ஆ) சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை மத்தியஸ்தத்தின் விளைவானதென்பதற்கான பின்வருவனபோன்ற சான்று:-

(i) சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக் கையின் மீது மத்தியஸ்தரின் அல்லது மத்தியஸ்தகர்களின் கையொப்பங்கள்;

(ii) விடயத்துக்கேற்ப, அத்தகைய மத்தியஸ் தகரினால் அல்லது மத்தியஸ்தகர்களினால் வசதிப்படுத்தப்பட்ட மத்தியஸ்தத்தின் விளைவாகத் தீர்த்துவைத்தல் உடன் படிக்கை செய்துகொள்ளப்பட்டதெனச் சான்றுப்படுத்துகின்றதும் மத்தியஸ் தகரினால் அல்லது மத்தியஸ்தகர்களினால் கையொப்பமிடப்பட்டதுமான ஆவண மொன்று;

(iii) மத்தியஸ்தத்தை நிருவகித்த நிறுவனத் தினாலான ஓர் அத்தாட்சிப்படுத்துகை;

(iv) (i), (ii) அல்லது (iii) இல்லாதிருக்கையில், நீதிமன்றத்துக்கு ஏற்கப்படற்பாலதான வேறேதேனும் சான்று.

*(2)* ஓராம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, "கையொப்பம்" என்பது, ஓர் இலத்திரனியல் கையொப்பத்தையும் உள்ளடக்குதல் வேண்டும்.

*(3)* மேல் நீதிமன்றம் அல்லது வேறேதேனும் நீதிமன்றம், *(1)* ஆம் உட்பிரிவிற் குறித்துரைக்கப்பட்ட தேவைப்பாடுகள் இணங்கியொழுகப்பட்டுள்ளனவென்பதைச் சரிபார்ப்பதற்கென ஏதேனும் அவசியமான ஆவணம் அதன்முன்னர் காண்பிக்கப்படுவதனைத் தேவைப்படுத்தலாம்.

*(4)* சர்வதேசத்தீர்த்துவைத்தல் உடன்படிக்கை நீதிமன்றத்தின் மொழியில் இல்லாதவிடத்து, நீதிமன்ற மொழியிலான சான்றுப்படுத்தப்பட்ட மொழிபெயர்ப்பொன்றுடன் சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை சேர்த்தனுப்பப்படுவதை நீதிமன்றம் தேவைப்படுத்தலாம்.

*(5)* நான்காம் உட்பிரிவின் நோக்கங்களுக்காக, மொழிபெயர்ப்பானது, அலுவலக முறையான அல்லது

சத்தியப்பிரமாணஞ்செய்த மொழிபெயர்ப்பாளரொருவரினால் அல்லது சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை எந்நாட்டில் செய்துகொள்ளப்பட்டதோ அந்நாட்டில் இலங்கையின் ஓர் இராஜதந்திர அல்லது தூதரக முகவரினால் அல்லது நீதிமன்றத்தின் திருப்திக்கு வேறுவகையாகச் சான்றுப்படுத்தப்படுதல் வேண்டும்.

*மேல் நீதிமன்றத்துக்கான விண்ணப்பத்தை அல்லது சான்றின் ஏல்தகவை மறுப்பதற்கான ஏதுக்கள்.*

9. (1) ஆறாம் பிரிவின் நியதிகளின்படி எந்த மேல் நீதிமன்றத்துக்கு விண்ணப்பமொன்று செய்யப்படுகின்றதோ அந்த மேல் நீதிமன்றம், அல்லது 7 ஆம் பிரிவின் நியதிகளின்படி எந்த வேறு நீதிமன்றத்தில் ஒரு தீர்த்துவைத்தல் உடன்படிக்கை சான்றாக ஏற்றுக்கொள்ளப்படுவதற்கு நாடப்படுகின்றதோ அந்த வேறேதேனும் நீதிமன்றம், எந்தத் திறத்தவருக்கெதிராக நிவாரணம் நாட்ப்படுகின்றதோ அந்தத் திறத்தவர் பின்வருவனவற்றை நிலைநாட்டுவதற்கான எண்பிப்பைக் கொடுத்துதவினால், அந்நிவாரணத்தை அளிக்க மறுக்கலாம் -

(அ) சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவரொருவர் ஏதேனும் இயலாமைக்கு உட்பட்டிருந்தார்;

(ஆ) சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை —

(i) ஏற்புடையற்பாலதான சட்டத்தின்கீழ் வெற்றான தாகவும் வறிதானதாகவும், தொழிற்படாததாகவும் அல்லது செயல்நிறைவேற்றப்பட இயலாததாகவும் உள்ளது.

(ii) அதன் நியதிகளின்படி, பிணிக்காததாக உள்ளது, அல்லது இறுதியற்றதாக உள்ளது; அல்லது

(iii) அடுத்துப்பின்னர் திரிபுபடுத்தப்பட்டுள்ளது;

(இ) சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையிலான கடப்பாடுகள் -

(i) உரியமுறையில் புரியப்பட்டுள்ளன; அல்லது

(ii) தெளிவற்றனவாக அல்லது விளங்கத்தக்கனவற்றனவாக உள்ளன;

(ஈ) நிவாரணம் அளித்தல் சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையின் நியதிகளை மீறுவதாகவிருக்கும்;

(உ) மத்தியஸ்தகருக்கு, அல்லது மத்தியஸ்தத்துக்கு ஏற்புடையற்பாலனவான நியமங்களின் பாரதூரமான மீறுகையொன்று மத்தியஸ்தகரினால் புரியப்பட்டமை, அம்மீறுகை புரியப்படாதிருந்திருப்பின், அத்திறத்தவர் சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையைச் செய்திருக்கமாட்டார்; அல்லது

(ஊ) மத்தியஸ்தகரின் பாரபட்சமின்மை அல்லது சுதந்திரம் பற்றிய நியாயப்படுத்தத்தக்க ஐயங்களை எழுப்புகின்ற சூழ்நிலைகளைத் திறத்தவர்களுக்கு வெளிப்படுத்துவதற்கு மத்தியஸ்தகரினால் தவறுதலொன்று புரியப்பட்டமை, அத்துடன் வெளிப்படுத்துவதற்குத் தவறியமையானது ஒரு திறத்தவரின்மீது முக்கியமானவொரு தாக்கத்தை அல்லது தகாத செல்வாக்கைக் கொண்டிருந்தது அத்தவறுதல் புரியப்படாதிருந்திருப்பின், அத் திறத்தவர் சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையைச் செய்திருக்கமாட்டார்.

(2) நீதிமன்றம் பின்வருவனவற்றைக் கண்டுபிடித்தால், நிவாரணம் அளிக்கவும் மறுக்கலாம்:-

(அ) நிவாரணம் அளித்தல் இலங்கையின் பகிரங்கக் கொள்கைக்கு முரணாகவிருக்கும்; அல்லது

(ஆ) பிணக்கின் விடயப்பொருள், இலங்கையின் சட்டங்களின்கீழ் மத்தியஸ்தம்மூலம் தீர்த்து வைக்கப்படுவதற்கு இயன்றதல்லாததாக உள்ளது.

நீதிமன்ற தீர்வையைத் தள்ளிவைத்தல்.

10. தீர்த்துவைத்தல் உடன்படிக்கைக்கான திறத்தவர் ஒருவர் இல்லாதிருக்கையில், 6 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவின்கீழ் சர்தேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையொன்று மேல் நீதிமன்றத்தின் தீர்வையொன்றாகப் பதிவு

செய்யப்பட்டுள்ளவிடத்து, மேல் நீதிமன்றம், அத்திறத்தவரின் விண்ணப்பத்தின் மேல், சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையை நீதிமன்றத் தீர்வையொன்றாகப் பதிவு செய்வதற்கான விண்ணப்பத்தை அனுமதிப்பதற்கு மேல் நீதிமன்றம் எந்த ஏதுவின்மீது மறுக்கலாமோ அந்த ஏதுவின்மீது நீதிமன்றத் தீர்வையைத் தள்ளிவைக்கலாம்.

*இணையொத்த விண்ணப்பங்கள் அல்லது உரிமைக் கோரிக்கைகள்.*

11. ஆறாம் பிரிவின் நியதிகளின்படி விண்ணப்பமொன்று செய்யப்பட்டு முடிவுறாதுள்ளவிடத்தும் (இதனகத்துப்பின்னர் “ஓர் இணையொத்த விண்ணப்பம்” எனக் குறிப்பீடு செய்யப்படுவதும்) அத்தகைய தீர்த்துவைத்தல் உடன்படிக்கை தொடர்பானதுமான விண்ணப்பமொன்று அல்லது உரிமைக்கோரிக்கையொன்று செய்யப்பட்ட வேறேதேனும் நீதிமன்றத்தில் நடுத்தீர்ப்பு நியாயசபையில் அல்லது இலங்கையில் அல்லது வேறேதேனும் அரசில் நியாயாதிக்கங்கொண்டுள்ள வேறேதேனும் நிறுவனத்தில் முடிபுவுறாதுள்ளவிடத்தும், இணையொத்த விண்ணப்பத்தின் வழக்குநடவடிக்கைகள் 6 ஆம் பிரிவின் நியதிகளின்படி நாடப்பட்ட நிவாரணத்தைப் பாதிக்கக்கூடும் அல்லது பாதிக்கும் சாத்தியமுடையது என மேல் நீதிமன்றம் அபிப்பிராயப்படுமிடத்தும், மேல் நீதிமன்றமானது –

(அ) இணையொத்த விண்ணப்பத்தின்வழக்குநடவடிக்கைகள் முடிவுறும்வரை அதன்முன்னருள்ள விண்ணப்பத்தைத் தீர்மானிப்பதனை ஒத்திவைக்கலாம்; அத்துடன்

(ஆ) ஒரு திறத்தவரின் கோரிக்கையின்மீது, பொருத்தமான பிணைப்பொறுப்பைக் கொடுக்கும்படி மற்றைய திறத்தவருக்குக் கட்டளையிடலாம்.

*மேல் நீதிமன்றத்தின் முன்னரான வழக்கு நடவடிக்கைகள்.*

12.(1) இச்சட்டத்தின் 6 ஆம் பிரிவின்கீழ் மேல் நீதிமன்றத்துக்கான ஒவ்வொரு விண்ணப்பமும், மனு மற்றும் சத்தியக்கடுதாசி என்றவகையாகச் செய்யப்படுதல் வேண்டுமென்பதுடன், மனுதாரர் அல்லது மனுதாரர்கள் தவிர மத்தியஸ்தத்துக்கான எல்லாத் திறத்தவர்களும் அத்தகைய மனுவுக்கான பிரதிவாதிகளாகப் பெயர்குறிப்பிடப்படுதலும் அதுபற்றிய அறிவித்தல் அவர்களுக்குக் கொடுக்கப்படுதலும் வேண்டும்.

(2) மனுவும் சத்தியக்கடுதாசியும் முன்வைக்கப்படுவதன்மேல், மேல் நீதிமன்றம், மனுவில் தரப்பட்டுள்ள கருமங்களைத் தீர்மானிப்பதற்காக அத்தகைய முன்வைப்பிலிருந்து இருவாரங்களினுள்ளான ஒருநாளை நியமித்தல் வேண்டுமென்பதுடன், சத்தியக்கடுதாசியினால் ஆதாரப்படுத்தப்பட்ட பிரதிவாதிகளின் ஆட்சேபனைகள் எவையேனுமிருப்பின், அவற்றை எழுத்தில் தெரிவிப்பதற்கானவொரு தேதியை அவர்களுக்கு வழங்குதலும் வேண்டும், அத்துடன் அவற்றின் பிரதிகளை மனுதாரருக்குக் கிடைக்கக்கூடியனவாக்குதல் வேண்டும்.

(3) மேல் நீதிமன்றத்துக்கு முன்னரான வழக்கு நடவடிக்கைகளில் சத்தியக்கடுதாசி என்றவகையாகச் சான்று அளிக்கப்படுதல் வேண்டும்:

ஆயின், எவ்வாறாயினும், மேல் நீதிமன்றம் தகுதியானதெனக் கருதுமிடத்து, சத்தியக்கடுதாசிமூலம் அளிக்கப்பட்ட சான்றுடன் சேர்த்து மேலதிகமாக வாய்மொழிமூலமான சான்றையும் அது பெறலாம்.

(4) ஒரு சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை மேல் நீதிமன்றத்தின் தீர்வையொன்றாகப் பதிவு செய்யப்பட்டுள்ளவிடத்து, (101 ஆம் அத்தியாயமான) குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவையின் ஏற்பாடுளின்கீழ் பதியப்பட்ட ஒரு தீர்வையொன்றாற்போன்று அதேமுறையில் அது வலுவுறுத்தப்படலாம் என்பதுடன், அதற்கிணங்க, தீர்வைகளை நிறைவேற்றுதல் தொடர்பான அச்சட்டக்கோவையின் XXII ஆம் அத்தியாயத்தின் ஏற்பாடுகள், ஏற்றமாற்றங்களுடன் அத்தகைய வலுவுறுத்துகைக்கு ஏற்புடையனவாதலும் வேண்டும்.

(5) மேல் நீதிமன்றமானது 6 ஆம் பிரிவின்கீழ் விண்ணப்பம் செய்யப்பட்டதிலிருந்து மூன்று மாதங்களினுள் வழக்கைக் கேட்டு இறுதியாகக் கையுதிர்த்தல் வேண்டும்.

*அறிவித்தல் மற்றும் அழைப்பாணை*

13. எவரேனுமாளுக்கு அறிவித்தல்களும் அழைப்பாணைகளும் சேர்ப்பிக்கப்படுவதனைச் சட்டம் தேவைப்படுத்துமிடத்து, அறிவித்தல்களும் அழைப்பாணைகளும்

*(101 ஆம் அத்தியாயமான)* குடியியல் நடவடிக்கைமுறைச் சட்டக் கோவையின் VIII ஆம் அத்தியாயத்திற்கிணங்க இலங்கையில் அல்லது இலங்கைக்கு வெளியே சேர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

*நாடொன்றிற்கான உதவி.*

14. இரண்டாயிரமாம் ஆண்டின் 39 ஆம் இலக்க, குடியியல் மற்றும் வணிக கருமங்களில் பரஸ்பர உதவியளித்தல் சட்டத்தின் ஏற்பாடுகள் குடியியல் மற்றும் வணிகக் கருமமொன்று தொடர்பில் வழக்கு நடவடிக்கையொன்றில் அழைப்பாணைகளை அல்லது வேறு ஆவணங்களின் சேர்ப்பிப்பதற்கான உதவியின் நோக்கத்திற்கென அச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பிரகடனம் செய்யப்பட்டவாறாக ஏதேனும் நாட்டிற்கு உதவியை வழங்குவது தொடர்பில் ஏற்புடையதாதல் வேண்டும்.

*திரும்பக் கிடைக்கப் பெறற்பால-தான அறிவித்-தலின் இறுதித் தேதியன்று இறுதித் தீர்வை.*

15. ஆறாம் பிரிவின் நியதிகள்படி விண்ணப்பமொன்று செய்யப்படுமிடத்து, 9 ஆம் பிரிவின் நியதிகளின்படி அத்தகைய விண்ணப்பத்தை மறுப்பதற்கான அல்லது 11 ஆம் பிரிவின் நியதிகளின்படி வழக்குநடவடிக்கைகளை ஒத்திவைப்பதற்கான ஏதுக்கள் எவையும் சமர்ப்பிக்கப்படாவிடின், மேல் நீதிமன்றம் சொல்லப்பட்ட உடன்படிக்கைக்கிணங்கத் தீர்ப்பொன்றை அளிப்பதற்கு மேற்கொண்டு நடவடிக்கையெடுத்தல் வேண்டுமென்பதுடன் திரும்பக் கிடைக்கப்பெறற்பாலதான அறிவித்தலுக்கான இறுதித் தேதியன்று இறுதித் தீர்வையைப் பதிதலும் வேண்டும்.

*பொருள் கோடல்.*

16. இச்சட்டத்தில், சந்தர்ப்பம் வேறுவகையாகத் தேவைப் படுத்தினாலொழிய —

"இலத்திரனியல்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"இலத்திரனியல் கையொப்பம்" என்பது, 2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல்வாங்கல்கள் சட்டத்திலுள்ளவாறான அதே பொருளையுடையதாதல் வேண்டும்;

"மேல்நீதிமன்றம்" என்பது, அரசியலமைப்பின் உறுப்புரை 154ஒ என்பதன் மூலம் மாகாணத்துக்காகத் தாபிக்கப்பட்டது.

1996 ஆம் ஆண்டின் 10 ஆம் இலக்க, மாகாணங் களுக்கான மேல் நீதிமன்றம் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் குடியியல் நியாயாதிக்கத்தைப் பிரயோகிக்கின்றதுமான மேல் நீதிமன்றம் என்ற பொருளாகும்;

“மத்தியஸ்தம்” என்பது, பிணக்குகளுக்கான திறத்தவர் களின்மீது தீர்வொன்றை விதிப்பதற்கான அதிகாரமில்லாத ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மூன்றாம் திறத்தவர்களின் (“மத்தியஸ்தகரின்”) உதவியுடன் அவர்களின் பிணக்கைச் சுமுகமாகத் தீர்த்துவைத்தலை எய்துவதற்கு திறத்தவர்கள் எத்தனிக்கின்ற, எந்த அடிப்படைமீது கொண்டுநடாத்தப்படுகின்றதோ அந்த அடிப்படைக்குப் பயன்படுத்தப்பட்ட சொல்லமைப்பைப் பொருட்படுத்தாது, ஒரு நடைமுறை என்று பொருளாகும்;

“திறத்தவர்கள்” என்பது, மத்தியஸ்தம் தொடர்பாகச் சர்வதேசத்தீர்த்துவைத்தல்உடன்படிக்கைக்கான திறத்தவர்கள் என்று பொருளாகும் என்பதுடன், மத்தியஸ்தத்தை நடாத்துகின்ற மத்தியஸ்தகரை அல்லது மத்தியஸ்தகர்களை உள்ளடக்கவும் மாட்டாது;

“தொழிலிடம்” என்பது,-

(அ) அத்தகைய திறத்தவர் அத்திறத்தவரின் தொழிலை நடாத்துகின்ற பிரதான இடம்;

(ஆ) ஒரு திறத்தவர் ஒன்றுக்கு மேற்பட்ட தொழி லிடங்களைக் கொண்டிருப்பின், சர்வ தேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கை செய்துமுடிக்கப் பட்ட நேரத்தில் திறத்தவர்கள் அறிந்திருந்த, அல்லது அவர்களினால் உத்தேசிக்கப்பட்ட சூழ்நிலைகளைக் கருத்திற்கொண்டு, சர்வதேசத் தீர்த்துவைத்தல் உடன்படிக்கையினால் தீர்க்கப் பட்ட பிணக்கிற்கு மிகநெருங்கிய தொடர்பு

முறையைக் கொண்டுள்ள தொழிலிடம் என்று பொருளாகும்;

(இ) ஒரு திறத்தவருக்குத் தொழிலிடமொன்று இராதிருப்பின், அத்திறத்தவரின் வழக்கமான வதிவிடம்,

என்று பொருளாகும்; அத்துடன்

"எழுத்திலான தீர்த்துவைத்தல் உடன்படிக்கை" என்பது, இலத்திரனியல் தொடர்பாடலில் அடங்கியுள்ள தகவல் அடுத்துப்பின்னரான குறிப்பீட்டுக்காகப் பயன்படுத் தத்தக்கனவாக இருக்கும்வகையில் அணுக்கத் தக்கனவாகவிருப்பின், இலத்திரனியல் தொடர்பாடலை உள்ளடக்கும்.

*ஒவ்வாமையின் விடயத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

*17.* இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.